**O.S. No. 77/2025**
**Date :06.02.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)
PW. 2 **திரு. ராமராஜ்**

**குறுக்கு விசாரணை :**

1. புரோநோட்டில் மேலே எழுதப்பட்டுள்ள என்னுடைய கையெழுத்தும், தாவா புரோநோட்டில் பிரதிவாதிகள் உள்ள இடமும் ஒரே பேனாவால் எழுதப்பட்டுள்ளது போல் உள்ளது என்றால் சரியல்ல, நான் எனது பேனாவால் கையெழுத்து போட்டுள்ளேன். மூன்று விதமான பேனாவால் கையெழுத்து போடப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. புரோநோட்டின் மேலே உள்ள மையிக்கும், நான் கையெழுத்து போட்ட மை–க்கும் வித்தியாசம் உள்ளதென்றால் சரியல்ல. செல்வராஜ் கையெழுத்து போட்ட மை–க்கும், மேலே உள்ள மை–க்கும் வித்தியாசமாக எழுதப்பட்டுள்ளது பேனாவுக்கு பேனா வித்தியாசம் இருக்கும், செல்வராஜ் கையெழுத்து போட்டது கீழே இருந்து மேல் நோக்கி தாழ்வாக கையெழுத்து போட்டு உள்ளார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் காண்பிக்கக் கூடிய பி.வா.சா.ஆ.1ல் செல்வராஜ்–ன் கையெழுத்து நேராக உள்ளது சரிதான். 23.04.2021–ம் தேதிய ஈடுகடன் பத்திரம் பி.வா.சா.ஆ.3. எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்றத்திலிருந்து சம்மன் வரவில்லை.

2. சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு வாதி அழைத்தன் பேரில் வந்துள்ளேன். அவர் எனது உறவினர் கிடையாது. சொட்டுநீர் போட்ட வகையில் எனக்கு அவர் பழக்கம். ரூபாய் நோட்டுகளாக எண்ணவில்லை, கட்டுகளாக எண்ணி கொடுக்கப்பட்டது. 500 ரூபாய் கட்டுகள் மொத்தம் 40 கட்டுகள் கொடுக்கப்பட்டது. நான் சொல்வது போல் பணமே கொடுக்கவில்லை என்றும், அந்த தேதியில் செல்வராஜ் புரோநோட் எழுதிதரவில்லை என்றால்

சரியல்ல. வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் உண்மையை மறைத்து உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.02.06 17:57:02 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.